# OS.No.238/2024, Dated 11.02.2026

The witness sworn under Oaths Act 1969 on this the day of 11th day of February 2026

**வா.சா.2 – கல்பனா க/பெ. சங்கர் வரவழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

01.12.2003 தேதியிட்ட ஆவணம் இல்லாத சொத்திற்கு எழுதப்பட்ட தவறான ஆவணம் என்றால் சரியல்ல. வாதி எனது அக்கா ஆவார். எனது தந்தை சர்வே எண்.117/7பி–ல் உள்ள 1 ஏக்கர் 15 செண்ட் நிலத்தை லட்சுமி என்பவரிடமிருந்து 2003ம் ஆண்டு வாங்கினார். அந்த ஒரு ஏக்கர் 15 செண்ட் நிலம் லட்சுமி என்பவரிடமிருந்து 2 ஆவணங்களாக வாங்கப்பட்டது. முதல் ஆவணத்தின் அளவு ஒரு ஏக்கர் ஆகும். 2வது ஆவணத்தின் அளவு 15 செண்ட் ஆகும். முதல் ஆவணத்தின் ஜக்குபந்தி கிழக்கில் அம்மாவாசை என்பவரின் நிலம் மேற்கே சாந்தி என்பவரின் நிலம் தெற்கே லட்சுமி என்பவரின் நிலம் வடக்கே வெள்ளவாரி கால்வாய் ஆகும். 2வது ஆவணத்தின் ஜக்குபந்தி கிழக்கே தனபாலின் நிலமும், மேற்கே சாந்தி என்பவரின் நிலமும், வடக்கே வெள்ளவாரி கால்வாயும், தெற்கே தனபாலின் நிலமும் உள்ளது. முதல் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஜக்குபந்திக்கு உட்பட்ட இடம் மட்டும் தான் பூமியில் உள்ளது என்றாலும், வேறு நிலம் எதுவும் அங்கு இல்லை என்றால் சரியல்ல. 2வது ஆவணத்தில் உள்ள 15 செண்ட் நிலம் என்பது முதல் ஆவணத்தில் உள்ள 1 ஏக்கரின் உள்ளே தான் வருகிறது என்றாலும், தனியாக 15 செண்ட்டு இடமே பூமியில் இல்லை என்றால் சரியல்ல. 01.12.2003 ம் தேதி எனது தகப்பனார் எனது அக்கா இந்திராவிற்கு எழுதிக்கொடுத்த சொத்தின் அளவு 1 ஏக்கர் 15 செண்ட் என்றால் சரிதான். அதன் பின்னிட்டு எனது தந்தை எனது சகோதரர்களுக்கு தலா 2 1/2 செண்டு என்று எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது தகப்பனார் மேற்படி தலா 2 1/2 செண்டு என்று எழுதிக்கொடுத்த 5 செண்டு நிலம் பூமியில் இல்லை என்றாலும், அது கற்பனையாக எழுதப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி கற்பனையாக எழுதப்பட்ட 5 செண்டை தான் எனது அக்கா வாங்கியதாக குறிப்பிடுகிறார் என்றால் சரியல்ல. 28.07.2003 தேதி

அன்று லட்சுமி எனது தகப்பனாருக்கு விற்பனை செய்தது 1 ஏக்கர் தான் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி அந்த சர்வே எண்ணில் மீதம் இருந்த 27 சென்டை 2ம் பிரிதிவாதிக்கு 22.05.2008 அன்று விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல. அந்த நிலம் சாந்தி நிலத்திற்கு தெற்கு, வாதி நிலத்திற்கு வடக்கு, மேற்கு 1ம் பிரதிவாதி நிலத்திற்கு கிழக்கு என்றும், இதன் மத்தியில் 27 செண்டு என்றும் உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி 27 செண்டும் எப்போதும் பூமியில் இருந்துள்ளது என்றாலும், அதை 2ம் பிரதிவாதி தான் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. அந்த 27 செண்டில் தான் வாதி 15 செண்டு கேட்கிறார் என்றாலும், அது சட்டப்படி தவறானது என்றால் சரியல்ல. இடத்தை அளந்து சரிபார்த்து கொடுக்கும்படி எனது அக்கா பல முறை வருவாய் துறையில் மனு செய்தாரா என்றால் மின் இணைப்பு வாங்குவதற்காக மட்டும் தான் மனு செய்தார். அந்த சமயத்தில் வருவாய் துறையினர் நில அளவையருடன் வந்து அளந்து சரிபார்த்து கொடுத்தார்கள் என்றால் அவர்கள் சரியாக அளக்கவில்லை. வருவாய் துறை ஆவணங்கள் மற்றும் பதிவு ஆவணங்களின் படி அளந்து தான் எங்களுக்கு அந்த இடத்தில் 1 ஏக்கர் தான் உள்ளதாக குறிப்பிட்டு சென்றார்கள் என்றால் சரியல்ல. எனது அக்காவிடம் அந்த இடத்தில் அளந்து சரிபார்த்துவிட்டதாகவும், ஒரு ஏக்கர் மட்டும் தான் உள்ளதாகவும், ஒப்புதல் வாங்கி சென்றார்கள் என்றால் சரியல்ல. வருவாய் துறை ஆவணங்களின் படி நில அளவையர் உதவியுடன் அளந்தால் உண்மை தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து விபரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சர்வே எண்.117/7பி என்பது தற்போது இல்லை என்றாலும், வழக்கு தாக்கல் செய்யப்படுவதற்கு முன்பே உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்றால் எனக்கு அந்த விபரம் தெரியாது. சர்வே எண்.117/7 பி, 1பி, 0.40.5 ஏர்ஸ் உட்பிரிவு செய்யப்பட்டு வாதிக்கு பட்டா கொடுத்துவிட்டார்கள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. அவ்வாறு பட்டா வழங்கப்பட்ட பின்னிட்டு அது குறித்து எனது அக்கா ஆட்சேபணை எதுவும் செய்யவில்லை என்றால் எனது அக்காவிற்கே அது குறித்து

தெரியவில்லை. பாபு லட்சுமியிடம் வாங்கிய 27 செண்டு மற்றும் அவருடைய இதர நிலங்களுடன் சேர்த்து 2ம் பிரதிவாதிக்கு 31 ஏர்ஸ் உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண்.117/7பி1ஏ என்று பட்டா வழங்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதிக்கு பட்டா வழங்கப்பட்ட போதும், எனது அக்கா ஆட்சேபணை செய்யவில்லை என்றால் அதுவும் எனது அக்காவிற்கு தெரியவில்லை. மேற்படி பட்டாவிற்கு உட்பட்ட இடத்தில் 2ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளார் என்றால் இல்லை. மேற்படி 2ம் பிரதிவாதி பெயரில் உள்ள 76 செண்டில் நாங்கள் எவ்வளவு அனுபவித்தில் உள்ளதாக குறிப்பிடுகிறோம் என்றால் 15 செண்டில் அனுபவத்தில் உள்ளோம். அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்தள்ளோம். 01.12.2003ம் தேதி எனது தகப்பனார் 1ம் பிரதிவாதியிடம் வாங்கிய 15 செண்டு பூமியிலேயே இல்லை என்றாலும், ஏற்கனவே வாங்கப்பட்ட 1 ஏக்கருக்குள் தான் அந்த 15 செண்டும் உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து விவரம் தவறு என்றாலும், தற்போதைய உட்பிரிவு விவரங்களும், சுற்றெல்லை விவரங்களும், குறிப்பிடாமல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தவறானது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தே பூமியில் இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் செலவுத் தொகையுடன் இவ்வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.11 16:48:44 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி